1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் கூடுதல் படுக்கை வசதி, மேலும் உதவி அறுவை மருத்துவர்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் என்பது தாலுக்கா தலைநகர். அது அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதி. அங்கு ஒரே ஒரு அரசு மருத்துவமனை உள்ளது, அதிலும் படுக்கை வசதிகள் இல்லை. அதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுத்து படுக்கை வசதி அதிகரிக்கப்படுமா? அது போல அங்கே நீண்டகாலமாக மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறதே, அந்நிலை உடனடியாக போக்கப்படுமா ? உடனடியாக தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை ஏற்கெனவே 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனை. 25 படுக்கைகள் ஆண்களுக்கும், 25 படுக்கைகள் பெண் களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. அங்கு டாக்டர்கள் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதைப்பற்றி அரசு நிச்சயமாக விரைவில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கும்.

சிவகாசி அரசு மருத்துவ மனையில் பீடியாட்ரிக் வார்டு கட்டுதல்.

129—(*வினா எண். 7868) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகர் அரசு மருத்துவமனையில் 'யூனிசெப்' திட்டத்தின்கீழ் பீடியாட்ரிக் வார்டு கட்ட (குழந்தைகள் நல மையம்) அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய குழந்தைகளுக்காக, தொழிலாளர்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல்வேறு நன்மைகளை செய்துகொண்டிருக்கிறது. அதை முன்னிட்டாவது யூனிசெப் உதவியுடன் இந்த ஆண்டிலேயே அங்கு பீடியாட்ரிக் வார்டு கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன், மருத்துவமனைகளில் வார்டுகளைக் கட்டுவது என்பது அரசின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து இருக்கிறது. அரசின் நிதி ஆதாரம் அதற்கு இடம் தந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தடவைகள் மருத்துவத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், தொழிலாளர் நல அதிகாரிகளும் சிவகாசி நகர் அரசு மருத்துவமனையை வந்து நேரடியாகப் பார்வையிட்டார்கள். பீடியாட்ரிக் வார்டு கட்ட அரசிடம் நிதியாதாரம் இல்லையென்றாலும் யூனிசெப் திட்டத்தின்கீழ் பணம் தனியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதைக் கொண்டாவது அங்கே பீடியாட்ரிக் வார்டு கட்டப்படுமா ? மேலும் அதுசம்பந்தப்பட்ட மதிப்பீடுகளை எல்லாம் சம்பந்தப்பட்ட இரண்டு துறை அதிகாரிகளும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக யூனிசெப் உதவியுடன் இந்த வார்டு கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற விவரம் அரசினிடத்தில் இல்லை.

தாம்பரம் சானடோரியம் அரசு காசநோய் மருத்துவ மனை.

130—(*வினா எண். 9242) திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியத்தில் அமைந்துள்ள அரசினர் காசநோய் மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள படுக்கைகள் எத்தனை ?

(ஆ) மேலும் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா ?